ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி

# 6.2 – மின்னிடை மடவார்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# 6.2 – மின்னிடை மடவார்

‡ மின் இடை மடவார்கள் நின் அருள் சூடுவார் ⋆
முன்பு நான் அதஞ்சுவன் ⋆
மன்னுடை இலங்கை ⋆
அரண் காய்ந்த மாயவனே ⋆
உன்னுடைய சுண்டாயம் நான் அறிவன் ⋆
இனி அது கொண்டு செய்வதென் ⋆
என்னுடைய பந்தும் கழலும் ⋆
தந்து போகு நம்பீ ! ॥ **6.2.1** ॥

போகு நம்பீ ! உன் தாமரை புரை கண் இணையும் ⋆
செவ்வாய் முறுவலும் ⋆
ஆகுலங்கள் செய்ய ⋆
அழிதற்கே நோற்றோமே யாம் ⋆
தோகை மா மயிலார்கள் நின் அருள் சூடுவார் ⋆
செவி ஓசை வைத்தெழ ⋆
ஆகள் போக விட்டு ⋆
குழல் ஊது போய் இருந்தே ॥ **6.2.2** ॥

போய் இருந்தும் நின் புள்ளுவம் ⋆
அறியாதவர்க்குரை நம்பி ! ⋆
நின் செய்ய வாய் இருங்கனியும் கண்களும் ⋆
விபரீதம் இந்நாள் ⋆
வேய் இரும் தடம் தோளினார் ⋆

இத்திருவருள் பெறுவார் யவர் கொல் ⋆
மா இரும் கடலைக் கடைந்த ⋆
பெருமானாலே ‖ **6.2.3** ‖

ஆலினீள் இலை ஏழ் உலகம் உண்டு ⋆
அன்று நீ கிடந்தாய் ⋆
உன் மாயங்கள் மேலை வானவரும் அறியார் ⋆
இனி எம் பரமே ⋆
வேலினேர் தடம் கண்ணினார் ⋆
விளையாடு சூழலைச் சூழவே நின்று ⋆
காலி மேய்க்க வல்லாய் ! ⋆
எம்மை நீ கழறேலே ‖ **6.2.4** ‖

கழறேல் நம்பீ ! ⋆
உன் கை தவம் மண்ணும் விண்ணும் நன்கறியும் ⋆
திண் சக்கர நிழறு தொல் படையாய் ! ⋆
உனக்கொன்றுணர்த்துவன் நான் ⋆
மழறு தேன் மொழியார்கள் நின் அருள் சூடுவார் ⋆
மனம் வாடி நிற்க ⋆
எம் குழறு பூவையொடும் ⋆
கிளியோடும் குழகேலே ‖ **6.2.5** ‖

குழகி எங்கள் குழமணன் கொண்டு ⋆
கோயின்மை செய்து கன்மம் ஒன்றில்லை ⋆
பழகி யாம் இருப்போம் ⋆
பரமே இத்திரு அருள்கள் ⋆
அழகியார் இவ்வுலக மூன்றுக்கும் ⋆
தேவிமை தகுவார் பலர் உளர் ⋆

கழகம் ஏறேல் நம்பீ !⋆
உனக்கும் இளைதே கன்மமே ॥ **6.2.6** ॥

கன்மம் அன்றெங்கள் கையில் பாவை பறிப்பது⋆
கடல் ஞாலம் உண்டிட்ட⋆
நின்மலா ! நெடியாய் !⋆
உனக்கேலும் பிழை பிழையே⋆
வன்மமே சொல்லி எம்மை நீ விளையாடுதி⋆
அது கேட்கில் என்னைமார்⋆
தன்ம பாவம் என்னார்⋆
ஒரு நான்று தடி பிணக்கே ॥ **6.2.7** ॥

பிணக்கி யாவையும் யாவரும்⋆
பிழையாமல் பேதித்தும் பேதியாததோர்⋆
கணக்கில் கீர்த்தி வெள்ளக்⋆
கதிர் ஞான மூர்த்தியினாய்⋆
இணக்கி எம்மை எம் தோழிமார்⋆
விளையாடப் போதுமின் என்னப் போந்தோமை⋆
உணக்கி நீ வளைத்தால்⋆
என் சொல்லார் உகவாதவரே ॥ **6.2.8** ॥

உகவையால் நெஞ்சம் உள் உருகி⋆
உன் தாமரைத் தடம் கண் விழிகளின்⋆
அக வலைப் படுப்பான்⋆
அழித்தாய் உன் திருவடியால்⋆
தகவு செய்திலை எங்கள் சிற்றிலும்⋆
யாம் அடு சிறு சோறும் கண்டு⋆

நின் முக ஒளி திகழ ⋆
முறுவல் செய்து நின்றிலையே ॥ **6.2.9** ॥

நின்றிலங்கு முடியினாய் ! ⋆
இருபத்தோர் கால் அரசு களை கட்ட ⋆
வென்றி நீள் மழுவா ! ⋆
வியன் ஞாலம் முன் படைத்தாய் ! ⋆
இன்றிவ் ஆயர் குலத்தை ⋆
வீடுய்யத் தோன்றிய கரு மாணிக்கச் சுடர் ⋆
நின் தன்னால் நலிவே படுவோம் ⋆
என்றும் ஆய்ச்சியோமே ॥ **6.2.10** ॥

‡ ஆய்ச்சி ஆகிய அன்னையால் ⋆
அன்று வெண்ணெய் வார்த்தையுள் ⋆
சீற்ற முண்டழு கூத்த அப்பன் தன்னைக் ⋆
குருகூர்ச் சடகோபன் ⋆
ஏத்திய தமிழ் மாலை ⋆
ஆயிரத்துள் இவையும் ஓர் பத்திசையொடும் ⋆
நாத் தன்னால் நவில உரைப்பார்கு ⋆
இல்லை நல்குரவே ॥ **6.2.11** ॥

அடிவரவு — மின்னிடை போகு போயிருந்து ஆலின் கழறேல் குழகி கன்மம் பிணக்கி உகவையால் நின்று ஆய்ச்சியாகிய நல்குரவும்

மின்னிடை மடவார் முற்றிற்று

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்